# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.61/2026

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நாசிராபேகம் | Husband's Name | : | நவ்ஷாத்அலி |
| Village | : | தஞ்சாவூர் | Taluk | : | தஞ்சாவூர் |
| Calling | : | | Age | : | 41 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 10th day of July 2026.**

**(Accused present).**

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க MP No.1, Dated 09.07.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தஞ்சாவூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற முதன்மை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண் 4017, நாள் 09.07.2026 ன்படி திருமதி நாசிராபேகம் அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.07.10 11:19:01 +0530

தஞ்சாவூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் திரு P.துரை (System Analyst) என்பவர் Remote Point Co-ordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் Junior Scientific Officer ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.11.2023 அன்று மேற்படி அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்தபோது திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மூலமாக குடவாசல் காவல் நிலைய கு.எண் 580/2023 வழக்கின் CP No.197/2023 தடய பொருளை குடவாசல் காவல் நிலைய காவலர் 1076 குருசீலன் என்பவர் மூலம் 750 மிலி கொள்ளளவு கொண்ட ஒரு கண்ணாடி குப்பியில் நிறமுள்ள சாராயத்திற்குரிய மணமுள்ள 500 மிலி அளவுள்ள திரவம் SHO சீலுடன் பகுப்பாய்விற்கு ஒப்படைக்கப்பட்டதை ஆய்வு செய்தேன். ஆய்வு செய்த முடிவு மற்றும் அறிக்கையில் இத்திரவத்தில் எத்தில் ஆல்கஹால் அமிலங்கள், எஸ்டர்கள், உயரின ஆல்கஹால் மற்றும் ஆல்டிஹைடுகள் இருந்தன. இது சாராயமாகும். மேலும், இதில் 6.83 மிலி கிராம் அட்ரோபின் கலந்துள்ளது. இத்திரவம் அட்ரோபின் கலக்கப்பட்ட விஷ சாராயம் என சான்று வழங்கினேன். வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து வரப்பெற்ற T.No.5174 / 2023, TAN / PRO / 137 / 2023,

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.07.10 11:19:11 +0530

Dated 28.11.2023 அறிக்கை **அ.சா.ஆ.1**. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 2 கண்ணாடி குப்பிகள் பெறப்பட்டதாக காணப்படுகிறது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் காணொலி வாயிலாக படித்து காட்டப்பட்டு விளக்கி கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு மின் அஞ்சல் மூலம் சாட்சியம் அனுப்பி வைக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.07.10 11:19:20 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.